


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் "தமிழ் வார விழா நிறைவு விழா"வில், கலை பண்பாட்டுத் துறையின் இசைக் கல்லூரிகள் மற்றும் கவின்கலை கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே நடத்தப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெருமையைப் போற்றும் இசை, நடனம் மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், மு.பெ. சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி கவிதா ராமு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் "தமிழ் வார விழா" நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவியர்களின் "தமிழ் அமுது" நடன நிகழ்ச்சியைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி கவிதா ராமு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தி.மு.க. தணிக்கைக் குழுக் கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. தணிக்கைக்குழுக் கூட்டம், வருகிற 2025 மே 13, 14, 15 (செவ்வாய், புதன், வியாழன்) ஆகிய நாட்களில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்

அதுபோது தணிக்கைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018

**டி.ஆர்.பாலு எம்.பி.**
பொருளாளர்
தி.மு.க.

## ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

# திராவிட மாடல் அரசின் நாயகருக்கு வாழ்த்துகள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற காஞ்சி தெற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

காஞ்சிபுரம், மே 6 -

ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட நாயகருக்கு வாழ்த்துக்கள் என காஞ்சி தெற்கு மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார். காஞ்சி தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் கருங்குழி முகுந்தன் மகாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று பேசினார்.



இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் டிவி. கோகுலகண்ணன், க.செல்வம். எம்.பி, திருமதி கு.மலர்விழி குமார், மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். பி.எழிலரசன்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் ஆர். டி. அரசு, எம்.எஸ்.சுகுமார், மாநில தொண்டரணி சுகுமாரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சிகே. வி.தமிழ்ச்செல்வன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி செம்பருத்தி துர்கேஷ், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.டி.பிரேம் சந்த். எஸ். உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், எஸ்.சிகாமணி, பொன்சசிகுமார்,

மதுராந்தகம் நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் பொன்.சிவகுமார், பி.எச்.சத்தியசாய், கே.கண்ணன், ஜி.தம்பு, கெ.ஞானசேகரன், டி.குமார், பி.சேகர், க.குமணன், பி.எம்.பாபு, ஏழுமலை, ஏ.சிற்றரசு, எம்.எஸ். பாபு, சரவணன்,

பகுதி செயலாளர் எஸ்.சந்துரு, மாநகர நிர்வாகிகள் கே ஏ செங்குட்டுவன், ஏ எஸ். முத்து செல்வம், வ. ஜெகநாதன், கே. சுப்பராயன், பேரூர் செயலாளர்கள்.ஆ சுந்தரமூர்த்தி, என் பாண்டியன், .வி டி ஆர் வி .எழிலரசன், . மோகன்தாஸ், .கருங்குழி பேரூராட்சி மன்ற தலைவர் தசரதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்.அ. யுவராஜ், வ. மலர்மன்னன், நாத்திகம் நாகராஜன், இ. அசோகன்,.எ நூருல் அமீன், கலியுக கண்ணதாசன், ஜியாவுதீன் சுந்தர வதனம் கேஏ இளங்கோவன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ மணி க. பால்ராஜ் டி. சஞ்சய் காந்தி ஆண்டோசிரில் ராஜ்.எம் அருள்முருகன். எஸ் யுவராஜ் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ தீர்மா னங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சியின்நான்காண்டு மகத்தான சாதனைகளால் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டுகளும் விருதுகளும் குவிந்த வண்ணம் உள்ளன தமிழ்நாடு அரசின் தொலை நோக்கு திட்டங்களுக்கு அயல்நாடுகளிலும் . ஐநா மன்றத்திலும் பாராட்டுகள் குவிகின்றன அவர் புகழ் அவனி எங்கும் எதிரொலிப்பதை காண முடிகிறது.

மாநில சுயாட்சி உரிமை தீர்மானம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் தேதி தொடங்கி மே ஐந்தாம் தேதி வரை தமிழ்மொழி வார நாளாக கொண்டாட ஆணை மற்றும் பல அடுக்கடுக்கான முற்போக்கு திட்ட அறிவிப்புகள் அரசு ஊழியர் பெருமக்களுக்கு 9 சுவையான அறிவிப்புகள் மாற்றுத் திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒலிக்க வேண்டும் என்ற நோக்கிலும் அவர்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு தங்களுக்கான வாய்ப்புகளையும் சிறப்பு உரிமைகளையும் சமமாக பெறுவதற்கும் அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு வகை செய்யும் சட்டம்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் பல்கலைக்கழகம்.காலை உணவு திட்டம் , நம்மை காக்கும் 48, நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் புதுமைப் பெண் விடியல் பயணம்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுகின்றன

அனைத்து தரப்பினரையும் தமது அன்பாலும் ஆளுமையாலும் கட்டிப்போடும் காந்த சக்தியுடனும் நடந்து கொண்டு வரலாறு படைத்து வருகிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்பது தான் இந்த ஆட்சியினுடைய தாரக மந்திரம் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று பாராமல் அனைத்து தரப்பினருமே உயர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம்..

மேலே பாம்பு கீழே நரிகள் குதித்தால் அகழி ஓடினால் தடுப்புச் சுவர்.

இத்தடைகளை தாண்டி தான் திராவிட மாடலாட்சியாக தனது தலைமையில் ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வெற்றி தளத்திற்கு கொண்டு வந்து தமிழ்நாடு மக்கள் மகிழ்ச்சியோடு 2026லும் வரவேற்க தயாராக உள்ளனர், என்பதை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகம் தெரிவித்து திராவிட நாயகருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 02 :**

ஜூன் 3முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை மாவட்டத்திலுள்ள கிளை கழகங்கள் வார்டுகள் தோறும் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகள் செய்து மற்றும் மாவட்ட கழகம் அறிவிக்கும் கலைஞர் பிறந்த நாள் நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவது என ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 03 :**

நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு.

நான்காண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை ஒன்றிய , நகர, பகுதி, கழகங்கள் சார்பில் 20 பொது கூட்டங்கள் வாயிலாக மக்களிடம் கொண்டு செல்வதென தீர்மானிக்கப்படுகிறது.

## தங்கத் தமிழ் தந்த பாவேந்தரின் புகழ் ஓங்குக! தமிழர் வெல்க!

# பாவேந்தரின் கருத்துகளை எல்லோரிடமும் தொடர்ந்து கொண்டு செல்லுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – வலைதளப்பதிவு!

சென்னை, மே 6–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற "தமிழ் வார விழா" நிறைவு விழாவில், 5 தமிழறிஞர்களின் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களுக்கு நூலுரிமைத் தொகை மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிய பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**திராவிட இன எழுச்சி பொங்கும் தமிழ் உணர்வு பெண் விடுதலை சமத்துவம் சமூகநீதி தமிழ் இலக்கிய அழகியல் தமிழர் வாழ்வியல் ஆகியவற்றுக்கு அடையாளம் பாவேந்தர் பாரதிதாசன்!**

**எங்கும் அவர் கவிதைகள் முழங்கிடக் கண்டு உள்ளம் பொங்குகிறது, பெருமகிழ்ச்சியால்; பேருணர்ச்சியால்! தமிழர் குருதியில் பாவேந்தரின் வரிகள் கலந்தோட வேண்டியது காலத்தின் தேவை!**

**தமிழ்நாடெங்கும் நடைபெற்ற தமிழ்வாரவிழாவில் பங்கெடுத்த இளைஞர் பட்டாளமே...**

**பாவேந்தரால் பரிசுகள் வென்றீர்; வாழ்த்துகள்!**

**இது போதுமா?**

**நம்முடைய களம் பெரிது அதில் நாம் பெறவுள்ள பரிசு அதனினும் பெரிது! தொடர்ந்து கொண்டு செல்லுங்கள் பாவேந்தரின் கருத்துகளை எல்லோரிடமும்!**

**தங்கத்தமிழ் தந்த அவரது புகழ் ஓங்குக! தமிழர் வெல்க!**

இவ்வாறு, அவ்வலைதளப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை மீண்டும் தாக்குதல்கள் நிகழ்த்தா வண்ணம் பாதுகாப்பை உறுதி செய்திடுவீர்!

# கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மே 6–**

**இலங்கை கடற்படையினரால், தமிழ்நாட்டின் கடலோர மீனவ மக்களிடையே பெரும் துயரத்தை ஏற்படுத்தி வரும் சில பிரச்சினைகள் குறித்தும், அதனை தடுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (05.05.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:–

### இந்திய மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள்

சமீப காலமாக இந்திய மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்த நபர்களால் தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த மே 2–ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 23 மீனவர்கள் மற்றும் அவர்களது 5 நாட்டுப் படகுகள் கடலில் அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்தவர்களால் வெவ்வேறு சம்பவங்களில் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களின் ஜி.பி.எஸ். கருவிகள், கைப்பேசிகள், வி.எச்.எப் உபகரணங்கள், ஐஸ் பெட்டிகள், இயந்திர பாகங்கள், இன்வெர்ட்டர் பேட்டரிகள், அடுப்பு, சுமார் 470 கிலோ மீன்பிடி வலைகள், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் போன்ற தனிப்பட்ட உடைமைகளும் பறிக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்கவும், தாக்குதல் நடத்தியவர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவும், இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தொடர்புடைய அதிகாரிகளிடம் இப்பிரச்சனையை எடுத்துச் சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை சேதப்படுத்தாமல் திரும்ப வழங்குதல்

இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் துறை (DFAR) பரிந்துரைக்கு ஏற்ப,செயற்கை பவளப் பாறை அமைப்புகளை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2022 மற்றும் 2023–ஆம் ஆண்டுகளில் இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 34 மீன்பிடிப் படகுகளை உடைத்து கடலில் மூழ்கடிக்க உள்ளதாகவும், மீன்பிடி படகுகளை நம்பியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு இதனால் பேரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவும், தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை இலங்கை அரசு திரும்ப ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விடுவிக்கப்பட்ட படகுகளை விரைந்து திரும்ப வழங்க நடவடிக்கை

05.05.2025 அன்றைய நிலவரப்படி, தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 229 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள் இலங்கை நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட 12 மீன்பிடி படகுகளுடன் 101 மீனவர்களையும், 14 மீட்புப் படகுகள் மூலம் இந்தியாவிற்கு கொண்டுவதற்கு ஏற்கனவே தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவிற்கு ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் விரைவில் நடவடிக்கை எடுத்து உதவுமென்று நம்புவதாக தனது கடிதத்தில் குறிட்டுள்ளார்.

இந்த முக்கியப் பிரச்சினைகளை இலங்கை அரசிடம் எடுத்துச் சென்று, இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்கவும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை சேதப்படுத்தி கடலில் மூழ்கடிப்பதைத் தடுக்கவும், இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும்,

229 மீன்பிடிப் படகுகளையும் மீட்டுக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்கவும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கதடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.